**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.1050/2024**

| Deposition of Name | கார்த்திகா | Prosecution | DW–1 Cross |
|---|---|---|---|
| Father Name | கல்யாணம் | Defence | |
| Village | சீர்காழி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 56/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**11.03.2026**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு புகார்தாரரை எவ்வளவு காலமாக தெரியும் என்றால் கடந்த 20 வருடங்களாக தெரியும். புகார்தாரர் எங்கள் குடும்ப நண்பர் என்றால் குடும்ப நண்பர் கிடையாது. அவர் எனது தாய்க்கு தெரிந்தவராவார். என் தாய்க்கு அவரோடு பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளது. நாங்கள் எல்லோரும் அவரை அண்ணன் என்று தான் அழைப்போம். நான் எங்கு வேலை செய்கிறேன் என்றால் சீர்காழியில் உள்ள SMS நடுநிலைப் பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றுகிறேன். நான் எனது குடும்ப செலவுக்காக வாதியிடம் பணம் வாங்கினேன் என்றால் சரிதான். அந்தக் கடன் இதுநாள் வரையிலும் நிலுவையில் தான் உள்ளது என்றால் தவறு. நான் கடனை அடைத்து விட்டேன். கடனை தீர்த்தேன் என்று சொல்வதற்கு ஆதாரமாக எந்த ஆவணங்களும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பையன் முன்னிலையில் பணத்தை கொடுத்து கடனை தீர்த்தேன். உண்மையில் நான் கடனை தீர்த்து இருந்தால் வாதி வசம் இருந்து ஆவணங்களை திரும்ப கேட்டு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பி இருப்பேன் என்றாலும் அவ்வாறு அனுப்பாததிலிருந்து இந்த கடன் தீர்க்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது என்றாலும் சரியல்ல. நான் வாய்மொழியாக பலமுறை ஆவணங்களை திரும்ப கேட்டேன் அதற்கு அவர்

சாக்கு போக்கு சொல்லி காலம் கடத்தி வந்தார். உண்மையில் நான் அவரிடம் வாங்கியது ரூபாய் இரண்டு லட்சம் தான். அப்போதே வட்டி தொகையை பிடித்துக் கொண்டு ரூ.180000 மட்டுமே கொடுத்தார்.

நான் புகார்தாரரிடம் ரூ.2,00,000/- மட்டும் வாங்கியதாக சொல்வதற்கு சான்றாக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அப்போதுதான் அவரிடம் வெற்று காசோலையை வெறும் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்திருந்தேன். நான் அவ்வாறு காசாலை கொடுத்தேன் என்று சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் சரிதான். அதேபோல காவல்துறையிலோ அல்லது நீதிமன்றத்திலோ புகார் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் நான் பணத்தை செலுத்தி இருந்தும் வாதி ஆவணங்களை திரும்ப கொடுக்கிறாவிட்டால் நான் படித்தவர் என்கிற வகையில் நிச்சயம் சட்ட நடவடிக்கை ஏதேனும் எடுத்து இருப்பேன் என்றாலும் அவ்வாறு எதுவும் எடுக்காததில் இருந்தே நான் சொல்வது பொய் என்பது தெளிவாக தெரிகிறது என்றால் சரியல்ல.

இந்த வழக்கு காசோலையில் உள்ளது என்னுடைய கையொப்பம் என்றால் சரிதான் ஆனால் அதில் உள்ள சங்கதிகளை நான் எழுதவில்லை. வாதியிடம் அந்த காசோலையை நான் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். வெறும் கையொப்பம் மட்டும் இட்டு பூர்த்தி செய்யாத நிலையில் கொடுத்தேன். வா.சா.ஆ.5 ஆவணமான கடனுறுதி சீட்டில் உள்ளதும் எனது கையெழுத்துதான் என்றால் சரிதான். நான் வாதியிடம் கடன் வாங்கியதாக சொல்லும்போது தான் அந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்து கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் அந்த கடனை PF பணத்தை எடுத்து செலுத்தி முடித்து விட்டேன். அவ்வாறு PF பணம் எடுக்கப்பட்டதற்கு சான்றாக எது ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2023ம் வருடத்திலேயே கடன் தீர்க்கப்பட்டு விட்டதாக சொல்லும் நிலையில் நான் எனது வங்கிக்கு வாதி வசம் கொடுத்ததாக சொல்லப்படும் காசோலைகளை பொறுத்து stop payment request எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் கடன் தீர்க்கப்பட்டு இருந்தால் நான் நிச்சயம் காசோலை பேமண்டை நிறுத்தம் செய்ய அறிவுறுத்தியிருப்பேன் என்றாலும் இதிலிருந்தே நான் சொல்வது பொய் என்பது தெரிகிறது என்றாலும் சரியில்ல.

என்னிடம் காசோலைத் தொகையை செலுத்தச் சொல்லி வாதி தரப்பில் இருந்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் எனக்கு அறிவிப்பு எதுவும் வரவில்லை. நான் சொல்வது பொய் என்றாலும் அத்தகைய அறிவிப்பு அனுப்பப்பட்டு நான் அதைப் பெற்றுக் கொண்டேன் என்றாலும் அதற்கு ஆதாரம் நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

புகார்தாரர் வட்டிக்கு பணம் கொடுப்பவர் அல்ல என்றாலும் எனது தேவைக்காக பழக்கவழக்கத்தின் அடிப்படையில் வட்டி இன்றி அவர் எனக்கு கடன் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. வாதி வட்டிக்கு பணம் கொடுத்து தொழில் செய்பவர் ஆவார். எங்கள் தெருவில் அனைவருக்கும் அவர் பணம் கொடுத்து வாங்கியுள்ளார். அவர் 10 பைசா வட்டிக்கு பணம் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார். எங்கள் தெருவாசிகள் அவரை புதன்கிழமை தவணைக்காரரர் என்று தான் கூப்பிடுவார்கள். என் குடும்பத்தில் எனது தங்கை, எனது அக்கா ஆகியோருக்கும் அவர் வட்டிக்கு பணம் கொடுத்து திரும்ப வாங்கியுள்ளார். வாதி கந்துவட்டி வசூலிப்பவர் என கூறும் நிலையில் நான் அது பற்றி இதுவரையில் காவல்துறையிலோ அல்லது வேறு அதிகார அமைப்பிலோ புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. அவ்வாறு கொடுத்திருந்தால் நான் இன்று இந்த நீதிமன்றத்திற்கு வந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

நான் வாதியிடம் ரூ.2,00,000/ மட்டுமே கடன் வாங்கியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அதேபோல அந்த பணத்தை வட்டியோடு திரும்ப செலுத்தி விட்டதாக சொல்வதும் தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலையை நான் பூர்த்தி செய்யாமல் கொடுத்ததாகவும் அதனை வாதி தவறுதலாக பயன்படுத்தி விட்டதாகவும் சொல்லி நான் இதுவரையில் எங்கேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அந்த சங்கதிகளை சொல்லி நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். வாதி இந்த வழக்கில் சொல்லி உள்ள படி நான் அவரிடம் கடன் வாங்கி உள்ளேன் என்றாலும் அந்த கடனுக்காக இந்த வழக்கு காசோலையை கொடுத்துள்ளேன் என்றாலும் எங்கள் இருவருக்கும் இடையில் இருந்த நிலுவையில் உள்ள கடன் சம்பந்தமாகத் தான் காசோலை கொடுக்கப்பட்டது என்றாலும் நான் இந்த வழக்கில் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டியவர் என்றாலும் சரியல்ல. நான் காசோலைத் தொகையை இரண்டு மடங்காக

புகார்தாரருக்கு செலுத்த கடமைப்பட்டுள்ளவர் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் ரூ.21,00,000/- கடன் வாங்கிவிட்டு அவரை நீதிமன்றத்திற்கு அலைக்களிக்கிறேன் என்றால் சரியல்ல. காசோலை மோசடி செய்து வாதியை ஏமாற்றியதற்காக எனக்கு அதிகபட்ச தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**